# கடவுள்



திருமதி. சுபாங்கனி உதயசந்ர
கே.ஃ.தெஹி.ஃ. ஸ்ரீ கதிரேசன் தேசிய பாடசாலை
தெரணியகலை

- சைவ சமயத்தின் மூலப்பொருள், உள்நின்று உணர்த்தும் பரம்பொருள் சிவன் எனப்படும்.
- சிவம் அல்லது சிவன் எனப்படுவது செம்மையை கொடுப்பது அல்லது மங்கலத்ததைத் தருவது ஆகும்.
- கடவுளே உலகில் உள்ள பொருட்கள் யாவற்றிலும் மேலான பொருள் ஆதலால் கடவுளை பரம்பொருள் என்கின்றோம்.
  பரம் என்றால் மேலானது.
- "கட" என்பது யாவற்றையும் கடந்த நிலை, "உள்" என்பது உலகினுள்ளும் உயிர்களையும் கடந்தும் அவற்றின் உள்ளேயும் இருப்பதனால் கடவுள் என்கின்றோம்.

## கடவுளுக்கு வழங்கப்படும் காரணப்பெயர்கள்.

1. சச்சிதானந்தரூபி
   சத், சித், ஆனந்தம் எனும் மூன்று இயல்புளை கொண்டமை.


2. குணாதீதர்
   குணங்கள் யாவற்றையும் கடந்தவர்


## சைவத்திருமுறைகள் கூறும் சிவனின் இயல்புகள்.

01. ஆதியும் அந்தமும் இல்லாதவர்.
02. அருவம் உருவம் அருவுருவம் ஆகிய மூவகை திருமேனிகளைக் கொண்டு ஆன்மாக்ளுக்கு அருள் புரிபவர்.
03. இயற்கையாகவே முற்றறிவுடையவர்.
04. இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்குபவர்.
05. விருப்பு வெறுப்பு இல்லாதவர்.
06. எமது மனத்திற்கு எட்டாதவர்.
07. அவர் செய்யும் செயல்களால் மாத்திரம் அறியத்தக்கவர்.
08. அன்பே வடிவானவர்.
09. தன்னை வழிபடுவோருக்கும் வழிபடாதோறுக்கும் அருள் புரிபவர்.
10. வேண்டுவோருக்கு வேண்டும் வரம் அழிப்பவர்.
11. எங்கும் நிறைந்தவர்.

## சைவ சமய நூல்கள் குறிப்பிடும் இறையவனின் பிற பெயர்கள்.

01. பதி
02. இறைவன்
03. பரம்பொருள்
04. நிர்மலன்
05. ஈஸ்வரன்
06. ஈசன்
07. பரமன்
08. மெய்பொருள்
09. சிவம்
10. சிவன்


கடவுள்
சொரூபநிலை
1. குணம், குறி அற்றவர்
2. அனைத்தையும் கடந்தவர்
3. உண்மைத் தன்மை உடையவர்
தடத்தநிலை
1. குணம், குறிகளோடு உள்ளவர்
2. ஐந்தொழில்களை செய்பவர்
3. மூவகைத் திருமேனிகளை உடையவர்


மூவகைத் திருமேனிகள்
அருவம்
1. சிவம்
2. சக்தி
3. நாதம்
4. விந்து
உருவம்
1. பிரம்மா
2. விஷ்ணு
3. உருத்திரன்
4. மகேஸ்வரன்
அருவுருவம்
1. சதாசிவம் (சிவலிங்கம்)

## ஐந்தொழில்கள்

1. படைத்தல்
2. காத்தல்
3. அழித்தல்
4. மறைத்தல்
5. அருளல்

**வடமொழி நாமங்கள்**

1. சிருஷ்டி
2. திதி
3. சங்காரம்
4. திரோபவம்
5. அநுக்கிரகம்

**மூர்த்திகள்**

1. பிரம்மா
2. விஷ்ணு
3. உருத்திரன்
4. மகேஸ்வரன்
5. சதாசிவன்

## எண்குணங்கள்

1. தன்வயத்தனாதல்
2. தூயஉடம்பினராதல்
3. இயற்கைஉணர்வினனாதல்
4. இயல்பாகவே பாசங்களில் நின்றும் நீங்குதல்
5. பேரருள் உடைமை
6. முற்றும் உணர்தல்
7. வரம்பில் இன்பமுடைமை
8. முடிவில் ஆற்றல் உடைமை

## ஐந்தொழில்களை பஞ்சகிருத்தியங்கள் எனவும் அழைக்கலாம்.

**படைத்தல்** - ஆன்மாக்களுக்காக தனு, கரண, புவன, போகம் என்பவற்றை உருவாக்குதலே படைத்தல் எனப்படும்.

**காத்தல்** - படைக்கப்பட்டவை இருக்கவேண்டிய காலம் வரையும் அவற்றைக் காப்பது காத்தல் எனப்படும்.

**அழித்தல்** - அக்காலம் முடிய அவற்றை அழித்தல் ஆகும்.

**மறைத்தல்** - ஆன்மாக்களை பீடித்துள்ள மலத்தின் வீரியத்தை தடுத்தல் மறைத்தல் ஆகும்.

**அருளல்** - ஆன்மாக்களை மலபந்தத்தில் இருந்து முற்றாக நீக்கி அவற்றுக்கு பேரின்பத்தைக் கொடுத்தல் அருளல் ஆகும்.

ஐந்தொழில் தத்துவத்தை விளக்கும் நடராஜர் மூர்த்தம்.



சமய தத்துவ நூல்கள் உண்மைகளை நிரூபிப்பதற்குப் பிரதானமாக மூன்று வழிகளை கையாளுகின்றன.

அவை பிரமாணங்கள் அல்லது அளவைகள் எனப்படுகின்றன.

01. பிரத்தியட்சம்
02. அனுமானம்
03. ஆப்த வாக்கியம்.

1. பிரத்தியட்சம் - ஐம்பொறிகள் வாயிலாக பெறும் அறிவு.

02. அனுமானம் - கடவுளின் இருப்பை உணர்ந்துகொள்ளும் முறை.

03. ஆப்த வாக்கியம் - கடவுளை உணர்ந்த ஞானியர்களின் உண்மை வாக்கியம்.

தருமத்திற்கு புறம்பாக நடக்காதிருத்தலும், எல்லா உயிர்களையும் நேசித்தலும். கடவுளை வணங்குவதற்கு நிகரானவையே.

கடவுள் பேரருளாளர், அன்பே வடிவானவர் நாமும் இறைவனிடத்தும் உயிர்களிடத்தும் அன்பு செய்தல் வேண்டும்.




அன்பு செய்தல் தவம் செய்வதற்கு நிகரானது.
அன்பு செய்தால் இன்பநிலை தானே வந்து எய்தும்.